பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 24 செவ்வாய்க்கிழமை 08.01.2024 கதிர் 424

# மின் கட்டண அதிகரிப்பை எதிர்த்து சஜித் நேற்று நீதிமன்றத்தில் வழக்கு

## மின்சார சபை இலாபத்தில் இயங்குவதாகத் தெரிவிப்பு

மின் கட்டண அதிகரிப்பு மற்றும் மின் வெட்டுக்கு எதிராக எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, உயர்நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபையின் தலைமைஅலுவலகம், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர்திணைக்களம்ஆகியோர் மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், கிழக்கில் தனக்கு ஆதரவு திரட்டுவதில் மும்முரமாக இருக்கின்றார். அவரது மற்றைய பிரதான போட்டியாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நாட்டில் இல்லை. அவர் ஆஸ்திரேலியா சென்றுள்ளார். இதனால் கடந்த பல வாரங்களாக அவர் அரசியல் களத்தில் இல்லை. தேர்தல் நெருங்கிவரும் நிலையில் கட்சிக்காரர்கள் சுமந்திரன் எங்கே என்று தேடவேண்டியிருக்கின்றது. ஆனால், சிறிதரனோ கிழக்கில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் தொடர்ந்து கட்சி உறுப்பினர்களைச் ☞2

## லசந்தவுக்கு அஞ்சலி



அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ☞2

# ரணிலின் வடக்கு வருகை குறித்து தமிழ்த் தலைவர்கள் கடும் காட்டம்

### தமிழர்களின் நாடி பிடிப்பதே நோக்கம்: விக்னேஸ்வரன்
### வாக்குறுதிகளை நிறைவேற்றாதவர்: கஜேந்திரகுமார்
### தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்: சுரேஷ் பிரேமச்சந்திரன்
### தேர்தல் வெற்றியே இலக்கு: சாணக்கியன்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடமாகாண வருகை தொடர்பில்தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் சி.வி. விக்னேஸ்வரன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ்பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர்சாணக்கியன் ஆகியோர்இதுதொடர்பில் கடுமையான விமர்சனத்தினை வெளியிட்டு போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இது குறித்து சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது: ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க எம்முடன் பேச்சுக்களை முன்னெடுத்து பல விடயங்களைச்செய்யப் போவதாக ☞2

# யுக்திய நடவடிக்கையை எதிர்த்து கொழும்பில் நேற்றுப் போராட்டம்

போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்துவது என்ற பெயரில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுவரும்யுக்திய நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டோர் நேற்று இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகளை வலியுறுத்தி ஆணைக்குழுவின் தலைவரிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

போதைப்பொருள் கடத்தல்மற்றும்போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் 'யுக்திய' சோதனை மற்றும் கைதுநடவடிக்கைகளின் சட்டபூர்வத்தன்மை குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சட்டத்தரணிகள் கூட்டிணைவு மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் ☞9

# சுதந்திரக் கூட்டமைப்பை மீண்டும் இயக்க சு.க. நேற்றுக் கூடி முடிவு

## சில நாள்களில் முக்கிய முடிவு என்றும் அறிவிப்பு

சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைமீண்டும் செயற்படுத்துவது என்று கட்சியின் அதிகாரம் மிக்க மத்திய குழுக் கூட்டம் நேற்று கொழும்பில் உள்ள கட்சித் தலைமையகத்தில்கூடித் தீர்மானித்துள்ளது.

இதனையடுத்து, செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாவது:

இன்று (நேற்று) மத்திய செயற்குழுவில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக சுதந்திரக்கட்சி ☞9

# எதிர்க்கட்சிகளை இணைக்கும் முயற்றி வெற்றியளிக்கவில்லை

## டலஸ் அழகப் பெரும அறிவிப்பு

அனைத்து எதிர்க் கட்சிகளையும்இணைக்கும் முயற்சி வெற்றியளிக்கவில்லை என்று சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவர்டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இராஜகிரியவில் உள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைமை அலுலகத்தலி; நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:

நாங்கள் கடந்த எட்டுமாதங்களாக ☞2

# ஷேக் ஹசீனாவிற்கு ஜனாதிபதி வாழ்த்து

பங்களாதேஷில் அண்மையில்நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள ஷேக் ஹசீனாவிற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது வாழ்த்துகளைத்தெரிவித்துள்ளார்.

ஷேக்ஹசீனாவுக்கு விசேட வாழ்த்துச் செய்தியொன்றை ☞8

# விடுவிப்பு



வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி பயணித்த பேரணியில் கலந்துகொண்டதற்காக யாழ்ப்பாணம் பொலிஸாரால் குற்றச்சாட்ட வழக்கில்இருந்து 3 நாடாளுமன்றஉறுப்பினர்கள் உட்படஎழுபேரும்நேற்று விடுவிக்கப்பட்டனர். வழக்கு கிடப்பில் போடப்பட்டது. ☞8

# ஜனாதிபதித் தேர்தலில் டலஸ் போட்டியில்லை

## பெப். 3 அன்று கைச்சாத்து

ஜனாதிபதிதேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இராஜகிரியவில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் தலைமை அலுலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ☞2

# டின் இலக்க அறிமுகம் பெப்ரவரி முதல் அமுல்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

பெப்ரவரி முதல் திகதியில் இருந்து டின் (வீணூஹூ) இலக்கத்தை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகஅமைச்சரவை அந்தஸ்தற்ற அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் ☞9

# தமிழர் மரபுரிமை மாதமாக தையை அங்கீகரிக்க பிரிட்டனிடம் கோரிக்கை

பிரித்தானிய தமிழர் பேரவை ஆகியநாம்தமிழரின் தைதிருநாளினை முன்னிட்டு கடந்த பல வருடங்களாகதைமாதத்தினை தமிழர்களின் மரபுரிமை மாதமாக பிரித்தானியாவில் அங்கீகரிக்கப்படு வதற்காக, பிரித்தானியாவின் அரசியல் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து தை பொங்கல் திருநாளினை பிரித்தானிய நாடாளுமன்றத்தின் உள்ளே, எம் கலை, கலாசார அம்சங்களை முன்னிறுத்தி தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றோம்.

நீண்ட பாரம்பரியங்களையும் நிலத்தையும் உரித்தாகக்கொண்டஎம் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகளை பிரித்தானிய தமிழர் பேரவையினராகியநாம், சர்வதேச நாடுகளுடன் இணைந்து மேற்கொண்டுவரும் சமகாலத்தில், எமக்கான தனித்துவமான ☞9

# செங்கடலுக்கு அனுப்பி வைக்க இலங்கை போர்க் கப்பல்கள் தயார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய செங்கடல் மற்றும் அதனை அண்மித்த பிராந்தியத்திற்கு இலங்கை கடற்படையின் கப்பல்களை அனுப்பி வைக்க தயார் என்று கடற்படை ஊடகப் பேச்சாளர், கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சந்தித்து தனக்கு ஆதரவு திரட்டி வருகின்றார்.

தமிழ்த் தேசியத்திற்காகப் போராடுவேன் என்பதுதான் அவரது பிரதான கருத்தாக இருக்கின்றது. அத்தோடு, தலைவராகவதற்கும் தீர்வைப் பெறுவதற்கும் ஆங்கில அறிவு உள்ளவர்தான் தலைவராக வேண்டும் என்பதல்ல என்றும் அவர் கூறிவருகின்றார். அதற்கு உதாரணமாக எம்.ஜி.ஆர், கருணாநிதி, தலைவர் பிரபாகரன் ஆகியோரின் பெயர்களையும் இழுத்-துவிடுகின்றார் என்றும் கிழக்கிலுள்ள கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறையில் அவர் ஆற்றிய உரையின் சில பகுதிகளை இங்கே உங்கள் பார்வைக்காகத் தருகின்றேன். அதன்சரிபிழைகளை நீங்களேமதிப்பிட்டுக்கொள்ளுங்கள்.

வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் தலைவனை மக்கள் தொண்டர்கள் தெரிகின்ற சந்தர்ப்பம் வந்திருக்கிறது. வேறெந்தகட்சியிலும் இல்லாத ஜனநாயக அணுகுமுறை இது. தேர்தல் என்றால் வெற்றி தோல்வி சகஜம். பரீட்சை போல. அதில்சிலநெருடல்கள்இருக்கத்தான் செய்யும். ஆனால் அது கால ஓட்டத்தில் மாறி போகும் .

எமது நோக்கம் எல்லாம் தமிழ் தேசியத்தை நோக்கியதாகவே இருக்கும். மக்களோடு இணைந்து பயணிக்க வேண்டியது எனது கடமை. அதனை நான் மக்களோடு மக்களாக இணைந்து முன்னெடுப்பேன்.

இன்றுஅம்பாறைமாவட்டத்திற்கு விஜயம் செய்து மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கிய பொதுச் சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடினேன். ஆரோக்கியமான கருத்துக்களை மனம் விட்டு பேசினார்கள். நான் தலைவரானால் எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற துல்லியமான கருத்து ஏற்பட்டிருக்கின்றது.

29 கிராம சேவை பிரிவுகளை கொண்ட தமிழர் பிரதேசமாக கல்முனைதமிழ்பிரதேசசெயலகம் உள்ளது. ஏலவே இது வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்டுள்ளது. இருந்த போதிலும் சகோதர இன சில அரசியலாளர்கள் இதனை தடுப்பது பகிரங்கமாகவே தெரிகிறது.

நான் தலைவராகிறேனோ இல்லையோ எமது கட்சி இந்த பிரதேசம் செயலகம் தொடர்பில் தனித்துவமான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கும். இதற்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்படுமா? என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

எது எப்படியோ அரசு இந்த செயலகத்தை மக்களிடம் கையளித்தேயாக வேண்டும். இதுவே எமது கட்சியின் நிலைப்பாடு .எமது கட்சியின் நோக்கமே இனவிடுதலைக்கான இலக்காகும். அதனைஉடைப்பதற்கு மாறி மாறி வரும் அரசுகள் போதைப் பொருள் பாவனை, நில ஆக்கிரமிப்பு புத்தர் சிலை விவகாரம்போன்றசெயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள். அதற்கு எமது மக்கள் பலியாக கூடாது. நாங்கள் மக்களோடு இணைந்து பயணிக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுப்போம்.அந்தநம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

வெற்றியோ தோல்வியோ நாங்கள் கட்சிக்காக இணைந்து பயணிப்போம். கட்சியைச் சீர் குலைக்கும் எண்ணம் கடுகளவும் இல்லை. தேசிய இலக்கை நோக்கி புலம்பெயர் எமது உறவுகளுடன் இணைந்து எமது மக்களின் எதிர்காலத்தை நோக்கிய பயணத்திற்கு நாங்கள் முனைப்பாக செயல்படுவோம் -என்றார்.

கட்சித் தலைமைக்குப் போட்டி நடப்பதால்கட்சிபிளவுபட்டுவிடுமோ என்று அதிகம் கவலை கொண்டுள்ள தலைவர் மாவை சோ. சேனாதிராசாவுக்கு இது பெரும் ஆறுதலாக இருக்கும் என்று கருதலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மின் கட்டண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுத்தாக்கல் தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்ததாவது:

இலங்கை மின்சார சபை வழங்கிய தரவுகளுக்கமைய 52,000 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்டதை விடநீர் மின்னுற்பத்திஅதிகரித்தமை மற்றும் மின்சாரத்திற்கான கேள்வி, குறைவடைந்தமையால் 26,000 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. இதனைத் தவிர, மின் அலகொன்றின் விலை 18 சதவீதத்தினால் அதிகரித் தமையினால் மேலும் 26 ஆயிரம் மில்லியன் ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதிகரித்துள்ள மின் கட்டணத்தைக் குறைப்பதற்கு மின்சார சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரி உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## லசந்தவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லசந்த விக்கிரமதுங்கவின் 15ஆவது நினைவு தினம் நேற்று கொழும்பு, பொரளை கனத்தை மயானத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில் லசந்தவின் உற வினர்கள், நண்பர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவூப் ஹக்கீம், ஹர்ஷ டி சில்வா ஐ.தே.கட்சியின் ரவி கருணாநாயக்க , கருஜயசூரிய உள்ளிட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். லசந்த கொல்லப்பட்டு 15 வருடங் களாகிவிட்டபோதும் அந்தக் கொலைக்குப் பொறுப்பான குற்றவா ளிகள் தண்டிக்கப்படவேயில்லை.

## செங்கடலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

இந்த கப்பல்கள் ஏமனின் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்படும் புரஸ்பரிட்டி கார்டியன் (Prosperity Guar-idan) நடவடிக்கையில் இணைக்கப்படவுள்ளது.

கப்பலை அனுப்பிவைக்க வேண்டியதிகதிதொடர்பில்இதுவரை அறிவிக்கப்படவில்லை. செங்கடலை அண்மித்த அரபுக்கடல், வளைகுடா கடல் உள்ளிட்ட பிராந்தியம் முழுவ தையும் உள்ளடக்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெ டுக்கப்படவுள்ளது என்றார்.

## எதிர்க்கட்சிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர மக்கள் சபையாக அனைத்து எதிர்க்கட்சிகளுடனும் கலந்துரையாடி பாலமொன்றை அமைப்பதற்குமுயற்சித்தோம். எமது எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் அந்தமுயற்சிவெற்றியளிக்கவில்லை என்பதுகவலைக்குரியவிடயமாகும். எனினும், அந்த முயற்சியை நான் கைவிடவில்லை என்பதைப் பொறுப்புடன் கூறுகின்றேன்.

நிபந்தனையின்றி ரணில் விக்கிரமசிங்கவை தோற் கடிப்பதற்கான அணியில் இணைவதாக ஊடக அலைவரிசையில் கூச்சலிடுவதை நான் கண்டேன். ஆம் ரணில் விக்கிரமசிங்கவின்அரசியல்நிகழ்ச்சி நிரலை தோற்கடிக்க வேண்டும். அது தொடர்பில் எவ்விதமான விவாதங்களும்இல்லை. நிச்சயமாக தோற்கடிக்க வேண்டும். ஆனால் எவ்வாறு தோற்கடிப்பது என்பதற்கு திட்டமொன்று அவசியமாகும்.

ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவருடன்இணைந்தகுழுவினரின் பொருளாதாரத் திட்டத்திற்கான மாற்றுத்திட்டத்தினை நாம் அறிமுகப்படுத்த வேண்டும். அந்த மாற்றுத் திட்டத்தினையே வெற்றியடைச்செய்ய வேண்டும்.

பதவிகள், எதிர்கால ஆட்சிக்கான முதலீடுகள் என்பதைத் தாண்டி அச்செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். நாட்டின் தற்போதைய நிலைமையை அனைவரும் அறிவார்கள்.

நாட்டின் எதிர்காலம் தொடர்பாகவும், எதிர்கால சந்ததியினர்தொடர்பாகவும்இருவரே தீர்மானங்களை எடுக்கின்றார்கள். அந்த இருவரினது பெயரும் 'ஆர்' எழுத்தில் ஆரம்பமாகின்றது. இவர்களே 'ஆர்' எழுத்தில் ஆரம்பமாகவும் ரிவேஸ் என்ற சொல்லுக்கு சமாந்தரமாக அனைத்தையும் திருப்புவதற்கு பார்க்கின்றார்கள். அதனை வெற்றி கொள்வதற்கே தற்போது அரசியல் வேலைத்திட்டமொன்று தேவைப்படுகின்றது என்றார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் தெரிவித்தார். அவற்றுக்குகாலஅவகாசங்களையும் வழங்கினார். ஆனால் எவ்விதமான நடவடிக்கைகளையும் அவர் முன்னெடுத்திருக்கவில்லை.

இவ்வாறான நிலையில்தான் வடக்குமாகாணத்திற்கு வருகை தந்துபல்வேறுநடவடிக்கைகளையும் முன்னெடுக்கப்போகிறார் என்று அறிவித்தார். அவர் அளித்த வாக்குறுதிகளை ஏற்கனவே நிறைவேற்றாத நிலையில் தற்போது வடக்கில் அவர் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தியதாகும்.

ரணில் விக்கிரமசிங்க இந்தப் பயணத்தின் மூலமாக வடக்கு மக்களின் நாடித்துடிப்பை அறிந்து கொள்வதற்கே முயற்சித்துள்ளார். அதனைவிடவும் அவர் நடை முறைச்சாத்தியமான விடயங்களை முன்னெடுக்க முயற்சிக்கவில்லை என்றார்.

கஜேந்திரகுமார்பொன்னம்பலம் தெரிவித்ததாவது: ரணில் விக்கிர மசிங்க நல்லாட்சி காலத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப் போகிறார் என்று தெரிவித்தார். அவருடைய கருத்தை நம்பி, சம்பந்தனும் தீபாவளிக்கு தீர்வு கிடைக்கும், பொங்கலுக்கு தீர்வு கிடைக்கும் என்று நம்பிக்கைகளை வெளியிட்டு ஈற்றில் ஏமாற்றம் அடைந்தார். அதன் பின்னர் தற்போது ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படும் என்று அறிவித்தார்.

பின்னர் 13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தி நடமுறைப்படுத்தப்போகிறார் எனவும் கூறினார். ஆனால் எந்தச் செயற்பாடுகளும் முன் னெடுக்கப்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் அவர் தமிழ் மக்களையும், தலைவர்களையும் ஏமாற்றுவதையே பிரதான செயற்பாடாக முன்னெடுக்கின்றார் - என்றார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச்சட்டம் அபிவிருத்துக்கு போதுமானது என்று கூறியுள்ளார். அத்துடன் புலம்பெயர் தமிழர்களையும் முதலீடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

முதலாவது 13ஆவது திருத்தச் னசட்டம் அபிவிருத்திக்கானது என்ற கருத்தே ஏற்றுக்கொள்ள முடியாதவொன்றாகும். இந்திய, இலங்கை ஒப்பந்தம் எதற்காக செய்யப்பட்டு13ஆவதுதிருத்தச்சட்டம் உள்ளீர்க்கப்பட்டது என்பதை ஜனாதிபதி ரணில் அறியாதவர் அல்லர். ஆகவே அவர் திட்டமிட்ட வகையில் தமிழ் மக்களை முட்டாள் கள் என்று நினைத்து 13ஆவது திருத்தச்சட்டம்பற்றியகருத்துக்களை வெளியிடுகின்றார்.

இதேநேரம், புலம்பெயர் தமிழர்களை முதலீடுகளைச் செய்யுமாறுஅழைப்புவிடுக்கின்றார். அவர்கள் தென்னிலங்கையில் ஒருபோதும் முதலீடுகளைச் செய்யப்போவதில்லை. காரணம், அச்சமானசூழல்இன்னமும்முடிவுக் கு கொண்டுவரப்படவில்லை.

ஆகவே வடக்கில் முதலீடுகள் செய்யப்படுவதாக இருந்தால் அதற்கான அதிகாரங்களும், சூழல்க ளும் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. ஆனால் அந்த நிலைமைகள் பற்றி ஜனாதிபதி கவனம் செலுத்தவில்லை.

குறிப்பாக, மாகாண சபைக ளுக்கான தேர்தல் நடத்தப்படாது ஐந்தாண்டுகளுக்கு மேலான காலம் கடந்துள்ள நிலையில் மாகாண சபைகள் இயங்காது எவ் வாறுமாகாணஅபிவிருத்தியைமுன் னெடுக்க முடியும்.

ஆகவே ரணில் விக்கிர மசிங்க முதலில் மாகாண சபைகளுக் கான தேர்தலை நடத்த வேண்டும். ஆகக்குறைந்தது வடக்கு,கிழக்கிலாவது அந்த தேர்தலைநடத்தவேண்டும்என்றார்.

தமிழரசுக்கட்சியின் சார்பில் சாணக்கியன் தெரிவித்ததாவது: ஜனாதிபதிரணில்வடக்கிற்குவிஜயம் செய்து,கில்மிஷாவைச்சந்திக்கின்றார், அகிலத்திருநாயகியைச் சந்திக் கின்றார். அவையெல்லாம் நல்ல விடயங்கள். ஆனால் தமிழ் மக்கள் நீண்டகாலமாக கோருகின்றஇனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்கவில்லை. அவர் பதவியேற்றதன் பின்னர் அதற்கான பேச்சுக்களை அவர் முன்னெடுத்திருந்த போதும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் எதனையும் நிறைவேற்றவில்லை.

ஜனாதிபதி ரணில் நினைத் திருந்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்கியிருக்கலாம். அதற்கான சந்தர்ப்பங்கள் காணப் பட்டிருந்தன. ஆனால்அவர்அதனைச் செய்யவில்லை இன்னமும் காலம் கடத்திக்கொண்டிருக்கின்றார் என்றார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் நான் போட்டி யிடப்போவதாக நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும்தெரிவிக்கவில்லை. அதனையே தற்போதும் கூறுகின்றேன். நான் ஜனாதிபதி தேர்தலில்போட்டியிடப்போவதில்லை என்றார்.

இதேவேளை, சுதந்திர மக்கள் சபையின் முக்கியஸ்தரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தனது ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசஎன்று அறிவித்துள்ளமை தொடர்பில்கருத்துவெளியிட்டடலஸ், பீரிஸ் தனது சொந்தமான அரசியல் முடிவினை அறிவித்துள்ளார். அதற்கு அவருக்கு சகல உரித்துக்களும் உள்ளன. அதுபற்றி எனக்கு கருத்துக்கூற முடியாது என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# உண்மையான நல்லிணக்கம் என்றால் எமது உறவுகளை விடுதலை செய்க

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு விஜயத்திற்கு சமாந்தரமாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கையெழுத்து வேட்டையை, குரலற்றவர்களின் குரல் அமைப்பு முன்னெடுத்திருந்தது.

அந்தவகையில், மிகநீண்ட காலங்களாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளையும், எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னதாக விடுதலைசெய்ய வேண்டும் என்கின்ற கோரிக்கையை முன்னிறுத்தி மதத் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலதரப்பட்டவர்களிடம் இருந்தும் திரட்டப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய குறித்த மகஜர், யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கபட்டுள்ளது.

அதன்போது ஜனாதிபதியிடத்தில், 'சமூகங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கம் மலர வேண்டுமானால், சிறையில் வாடும் எமது 12 தமிழ் அரசியல் கைதிகளையும் எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னர் விடுதலைசெய்ய வேண்டும்' எனத் தெரிவித்த, குரலற்றவர்களின் குரல் அமைப்பினுடைய ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன், அதற்கான கையெழுத்து மகஜரையும் ஜனாதிபதியிடத்தில் கையளித்துள்ளார்.

அதேநேரம், 'மிக நீண்ட காலமாக சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்' எனும் தலைமையில் உள்ள குறித்த மகஜரில் –

இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில், இந்த அழகிய சிறிய தீவில் வாழும் இனங்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலவும் அரசியல் முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர, அரசாங்கத்தையும் சம்பந்தப்பட்ட தரப்பினரையும் ஒரு நியாயமான மற்றும் நிலையான சமாதானத்தை நோக்கி நகர்த்தும் வேலைத் திட்டத்தை நீங்கள் உருவாக்க வேண்டும்.

மூன்றரை தசாப்த கால யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், தமிழ்–சிங்கள இனங்களுக்கிடையில் இடம்பெற்றுவரும் இனமுறுகல் மற்றும் முரண்பாடு காரணமாக பரஸ்பர புரிந்துணர்வும் நம்பிக்கையும் இன்னும் துளிர்விடவில்லை. தற்போதுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படும் வரை இந்த நாட்டில் இன முரண்பாடுகளும் அவநம்பிக்கையும் தவிர்க்க முடியாதனவாகவே இருக்கும்.

இந்த நாட்டில் நீண்டகாலமாக இனம் என்ற வகையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன, அரசியல் பிரச்சினைகளுக்கு நீதியான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பது அவசியமானதுடன், போராலும் மற்றும் இன்றும் போரின் விளைவுகளாலும் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நிரந்தர நீதியைப் பெற்றுக் கொடுப்பதுவும் அவசியமாகும். சமூகக் கண்ணோட்டம் கொண்ட மனித நேயமுள்ள சிவில் அமைப்புகளாக நாம் இதன் மூலம் மட்டுமே இலங்கைத் தீவில் உண்மையான, நிலையான, நியாயமான அமைதியை அடைய முடியும் என்று நம்புகிறோம்.

இவ்வகையில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தமிழ் மக்கள் மத்தியில் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது. தற்போதுள்ள இனப் பதற்றத்தைத் தீர்ப்பதற்கான நல்லெண்ண முயற்சியாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை நீங்கள் ஏற்கனவே ஆரம்பித்திருந்தீர்கள். ஆனால், தற்போது அவ்வேலைத் திட்டம் தேக்கமடைந்துள்ளது. தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கை தொடர்வது நல்லிணக்க முயற்சியாக தமிழ் மக்களுக்கு தங்கள் மீது வலுவான நம்பிக்கையை ஏற்படுத்த உதவும்.

வரலாறு முழுவதும், அரசியல் கைதிகள் அல்லது போர்க் கைதிகளின் விடுதலை அல்லது பரிமாற்றம் என்பது பிளவுபட்ட அல்லது போரில் இருக்கும் இரு தரப்பினரிடையே பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிக்கும்



செயலாக இருந்து வருகின்றது.

நீக்கப்பட வேண்டியதும் சர்வதேச ரீதியில் நாட்டிற்கு அவமானத்தைத் தருவதுமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் காரணமாக நீண்டகாலமாக (15 முதல் 28 ஆண்டுகள் வரை) சிறையில் வாடும் 12 தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் அதே சட்டத்தின் காரணமாக 14 ஆண்டுகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு மேல்நீதிமன்றத்தில் (வழ.இல.எச்.சி.%3861%2007) வழக்கை எதிர்கொண்டு '15 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் ரூபா 25000 அபராதம்' என தீர்ப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பின் சட்டமா அதிபரின் மேன்முறையீட்டுக்கு அமைய மேன்முறையீட்டு நீதி மன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயான திருமதி செ.சத்தியலீலா ஆகியோரையும் எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னர் விடுவித்து அவர்களது உறவினர்களுடன் சாதாரண வாழ்க்கை வாழ அனுமதிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

நீண்ட கால சிறைவாசம் காரணமாக இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் முதியவர்கள், நோயாளிகள், சிறையில் இளமையை இழந்தவர்கள் என உடல்ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டு, தினம் தினம் விடியலை எதிர்பார்த்து நடை பிணங்களாக சிறையில் வாடுகின்றனர்.

மனிதாபிமான அடிப்படையிலும் மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டும் திருமதி சத்தியலீலா உட்பட, எஞ்சிய 12 தமிழ் அரசியல் கைதிகளையும் அனைத்து வழக்குகளில் இருந்தும் குற்றச்சாட்டுகளை விலக்குவதன் மூலமும் அல்லது தண்டனைகளில் இருந்து பொது மன்னிப்பு வழங்குவதன் மூலமும் எந்தவித பாகுபாடும் இன்றி உடனடியாக விடுதலை செய்யுமாறு, துன்பப்படும் எமது மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம். – என்றுள்ளது. (05)

# வடக்கை ஏனைய மாகாணங்களைப் போன்று சமமாகப் பார்ப்பதே ஜனாதிபதியின் நோக்கம்

## சமன்ரத்னபிரிய கூறுகின்றார்

வடமாகாணத்தை ஏனைய மாகாணங்களை போன்று பொருளாதாரத்திலும் ஏனைய விடயங்களிலும் சமனாகப் பார்க்கவேண்டும் என்பதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாக இருக்கிறது என ஜனாதிபதி செயலக தொழில் விவகாரங்களின் பணிப்பாளர் நாயகம் சமன்ரத்னபிரிய தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெருமளவு நிதி ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 11 பில்லியன் ரூபா காணப்படுகின்றது. மாவட்ட செயலாளர்கள், மாகாண ஆளுநர்கள், அமைச்சின் செயலாளர்கள், திணைக்கள பணிப்பாளர்கள் ஊடாக சேர்ந்து பயணிக்கவேண்டும். வரையறையில்லாத பிரதேச ரீதியாக அபிவிருத்திகளை முன்னெடுத்து செல்வதே இலக்காக இருக்கின்றது. மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும் தமிழ் மக்களுக்கிடையே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றது என்று தெரியும்.

காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கான பிரச்சணை 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூர்த்தியாகும். இவர்களுக்கான பிரச்சினை இலகுவில் தீர்த்துவைப்பதற்காக 250 மில்லியன் ரூபாக்களை வழங்கவும் எதிர்பார்த்து இருப்பதாகத் தெரிவித்தார். சமுர்த்தி, அஸ்வசும போன்ற நிதி நிவாரணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதில் யாழ்ப்பாண மாவட்டம் அதிஷ்டவசமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான முறைப்பாடுகள் குறைவாகத்தான் இருக்கின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பல்கலைக் கழகங்களில் சிங்கள, ஆங்கில மொழியிலான மாணவர்களைக் கல்விகற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண விவசாயிகள் ஒரு புத்திசாலிகள். அவர்களுக்கான நவீனமயப்படும் விவசாய நலன்களையும் முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேசத்தில் மின்வலு, புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை உருவாக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதற்காக 2.2 பில்லியனை செலவுசெய்ய




எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்து காணிகள் இருந்து அடையாளம், ஆவணங்களை சரியாகக் காட்டிய 131 நபர்களது காணிகளை உயர்பாதுகாப்பு வலையத்தில் இருந்து விடுவித்துள்ளோம். இதில் 2,700 குடும்பங்கள் இன்னும் காணிகள்,வீடுகள் இல்லாமலும் வசித்து–வருகின்றனர். அவர்களுக்கான காணிகள், வீடுகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூர்த்தியாகப்படும்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக ஒருசிலர் விடுதலையாகியுள்ளனர். சில குற்றச்சாட்டுக்கள் இல்லாமல் விடுதலையாகியுள்ளனர். சிலருக்கு நீதிமன்றத்தின் ஊடாக வழக்கு நடைபெற்று வருகின்றது. அவர்களும் மிகவிரைவில் விடுதலையாகுவார்கள்.

ஜனாதிபதி நாளாந்தம் பல விடயங்களை முன்னெடுத்து வருகின்றார். வரிகள் இல்லாமல் அரசாங்கம் இல்லை. வரிகள் இல்லாமல் அரசாங்கத்தின் செலவுகளை செலவு செய்யவேண்டும். 2100 பில்லியன் வரிச்சலுகை 2019 ஆண்டு காலப்பகுதியில் இழக்கப்பட்டது. அதன்காரணமாக நாடு பொருளாதார ரீதியாகப் பின்னடைவுக்கு காரணமாக இருந்ததுடன் தற்போது வரி அதிகரிப்புக்கும் காரணமாக இருக்கின்றது. அதனால் தான் வரி உயர்வும் அவசியமாக இருக்கின்றது. – என்றார். இந்தச் சந்திப்பில் இலங்கை சமூக விகார பணிப்பாளர் நாயகம் கீர்த்திதென்னகோன் உடன் இருந்தார். (05)

# ஜனாதிபதியின் வவுனியா வருகையால் பயனில்லை

## நடந்தது சம்பிரதாய நிகழ்வே என்கிறார் செல்வம் எம்.பி.

ஜனாதிபதியின் வவுனியா வருகை சம்பிரதாய பூர்வமான ஒரு நிகழ்வே தவிர அதனால் பயன் ஏதும் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

ஜனாதிபதி அண்மையில் வவுனியாவிற்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது நிலஅபகரிப்பு அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக நாம் அவருடன் பேசியிருந்தோம். நாம் கூறும் விடயங்கள் உடனடியாக தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில் சென்றிருந்தோம்.

ஆனால் அது நடைபெறவில்லை. நாங்கள் கேட்ட விடயங்களிற்கான சரியான பதிலை அவர் தரவில்லை. சம்பிரதாயபூர்வமான ஒரு கூட்டமாகவே இது இடம்பெற்றது. இதேவேளை ஜனாதிபதி வந்துசென்ற பின்னர் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இராணுவமுகாம் ஒன்று புதிதாக அமைக் கப் பட்டுள்ளது. அது என்ன தேவைக்காக அமைக்கப்பட்டது என்ற விடயம் தெரி யவில்லை.

எமது மக்களை அச்சுறுத்து–வதற்கான செயற்பாடே அது. ஏற்கனவே பொலிஸ் சோதனைசாவடி அங்கு இருக்கின்றது. இந்நிலையில் இராணு–வத்தின் தேவை என்ன என்று புரியவில்லை. இது தொடர்பாக நாம் நாடாளுமன்றில் பேசுவோம்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பல ஊகங்கள் பேசப்படுகின்றது. வடக்குக் கிழக்கில் எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத சூழலில் இந்தத் தேர்தலை கையாளும் விதம் தொடர்பாக நாம்




சிந்திக்கவேண்டும்.

அனைத்து கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் இணைந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக நாம் பரிசீலிக்கவேண்டும்.

எமது கோரிக்கைகளை சிங்கள வேட்பாளர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையை நாம் உருவாக்கவேண்டுமானால் இந்த முயற்சியே பலனளிக்கும் என்று நான் நினைக்கின்றேன். அந்த ஒற்றுமை சாத்தியமா என்ற கேள்வி இருக்கிறது. தமிழ்தேசியகூட்டமைப்பு சிவில் அமைப்புக்களுடனும் தேசிய கட்சிகளுடனும் பேசி ஒரு முடிவிற்கு வருவது சாலச்சிறந்த தாக இருக்கும். தென் இலங்கை வேட்பாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ஒரு நிபந்தனைக்குட்படுத்தவேண்டும்.

அத்துடன் அரசால் கொண்டு வரப்படவுள்ள புதியபயங்கரவாத தடைச்சட்டம் மோசமானதாகவே உள்ளது. அதன்மூலம் ஜனநாயக போராட்டங்கள் தடுக்கப்படும் நிலை காணப்படுகின்றது. பத்திரிகைசுதந்திரம் கட்டுப்படுத்தப்படும் சந்தர்ப்பமும் உள்ளது. இதற்கு நாம் நாடாளுமன்றத்தில் எதிர்ப்பைக்காட்டுவோம். இந்தசட்டம் ஒழிக்கப்படவேண்டும் என்பதே ஐ.நாசபையின் நிலைப்பாடாக உள்ளது. எனினும் இலங்கை அரசாங்கம் அதனை ஏமாற்றி வருகின்றது. – என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## லசந்தவின் கொலை உணர்த்தும் பாடம்

அநியாயமாகச்சுட்டுப்படுகொலைசெய்யப்பட்ட, 'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்கவின் 15ஆவது நினைவு தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. அவரது உறவினர்கள் சிலர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் என மிகச் சொற்ப அளவிலானோர் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

லசந்தவின் கொலைக்கான நீதி கடந்த 15 ஆண்டுகளாகக் கிடைக்கவேயில்லை. அவரைக் கொலை செய்தவர்கள் யார் என்பதும் அதற்காக உத்தரவிட்டவர்கள் யார் என்பதும் மக்களால் ஊகிக்கக்கூடிய விடயங்களாக இருந்தபோதும், குற்றவாளிகள் இன்னமும் இந்தச் சமூகத்தில் சுதந்திரமாக நடமாடிக்கொண்டே இருக்கிறார்கள்.

லசந்தவின் கொலையில் மட்டுமல்ல போர்க் காலங்களில் கொல்லப்பட்ட பல தமிழ்ப் பத்திரிகையாளர்களின் விடயத்திலும் ஊடகங்கள்மீதானதாக்குதல்கள்கொலைகள் விடயங்களிலும்கூட இதுவேதான் நிலமை. கொலையாளிகள் இன்னமும் சுதந்திரமாகத் திரிந்துகொண்டே இருக்கிறார்கள்.

சில சமயங்களில் இந்தக் கொலைகளோடு தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படுவோர் பதவி உயர்வுகளையும் சொகுசு வாழ்க்கையையும்கூட அனுபவித்து வருகின்றார்கள். சமூகத்திற்கு உண்மையைச் சொல்ல முயன்ற ஒரே காரணத்திற்காகக் கொல்லப்பட்டஇந்தப்பத்திரிகையாளர்களுக்கும் ஊடகப் பணியாளர்களுக்கும் எப்போதாவது நீதி கிடைக்கும் என்கிற நம்பிக்கையையும் சமூகம் இழந்துவிட்டது.

பத்திரிகையாளர்கள் போரோடு நேரடியாகத் தொடர்புபட்டவர்கள் அல்லர். அவர்கள் போர் பற்றிய உண்மைகளைச் சமூகத்திற்குத் தெரிவித்தவர்கள் மட்டுமே. அப்படியிருக்கும்போது அவர்களின் கொலைகளை போரோடு தொடர்புபடுத்தித் தட்டிக்கழித்துவிட முடியாது. அப்படிச் செய்யக்கூடிய ஆட்சியாளர்கள் ஒருபோதும் மக்களிடம் நீதியுடன் நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

நல்லிணக்கம், உண்மை, நீதி, பரிகார நீதி, மனிதஉரிமைமீறல்களுக்கானபொறுப்புக்கூறல் என்கிறவார்த்தைகளைவைத்துவிளையாடும் ஆட்சியாளர்கள் பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்காக நீதி வாங்கித் தருவது தொடர்பில் எந்தவித அக்கறையும் அற்று இருக்கிறார்கள். இதுவே இலங்கையின் சாபக்கேடு. இந்தப் போக்கில் இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்போவதாக அவர்கள் கூறுவதும் பெரும் வேடிக்கை.



# அதிகரிக்கும் கடற்கொள்ளை!

**ராம்சங்கர்**

பிரேசில் நாட்டிலிருந்து பஹ்ரைனுக்கு சென்று கொண்டிருந்த லிபேரியா நாட்டு சரக்கு கப்பல் சோமாலியா கடற்கரை அருகே வந்தபோது கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வை கிளப்பியுள்ளது. இந்த சம்பவம் குறித்தும், யார் இந்த கடற்கொள்ளையர்கள், உலகளாவிய கடல்சார் குற்றங்களின் நிலை குறித்தும் கொஞ்சம் ஆராயலாம்.

உலக வர்த்தகத்தில் 90% க்கும் அதிகமானவை கடல் வழியாக மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு தேவையான உணவு பொருட்கள், தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பொருட்கள் ஏற்றிச் தொலைதூரம் செல்லக் கூடிய பெருங் கப்பல்களை குறிவைத்து ஆயுதங்களுடன் கப்பல்களில் ஏறி தங்கள் கட்டுபாட்டிற்குள் கொண்டுவந்து பொருட்களை திருடிவிடுகிறார்கள் கடல் கொள்ளையர்கள். உலகளவில் இதுபோன்ற சம்பவங்கள் குறைந்து கொண்டே வந்தாலும், முற்றிலும் நின்றுவிடவில்லை என்பதற்கு சமீபத்திய கடத்தலே உதாரணம் . இதுபோன்ற சம்பவம் இந்திய பெருங்கடலுக்கும் சோமாலியாவுக்கு இடையில் நடத்தேறியிருப்பதே இந்தியாவின் பேசுபொருள்.

லிபேரியா என்ற நாட்டின் சரக்கு கப்பல், பிரேசில் நாட்டிலிருந்து பஹ்ரைனுக்கு பயணித்துக் கொண்டிருந்தது. இந்நிலையில் கப்பல் வடக்கு அரபிக்கடல் பகுதியான சோமாலியா கடற்கரை அருகே வந்தபோது கடற்கொள்ளையர்கள் ஆறு பேர் ஆயுதங்களுடன் ஏறி கப்பலை கடத்தினர். இத்தகவல் இங்கிலாந்து நாட்டின் ராணுவ அமைப்புக்கு தெரிய வரவே, இதுகுறித்து இந்திய கடற்படைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனடியாக கண்காணிப்பு விமானத்துடன் சோமாலிய கடற்கரை பகுதியில் ஆய்வு மேற்கொண்டு கப்பலுடன் தொடர்பை ஏற்படுத்தி, சரக்கு கப்பலை மீட்க, ஐஎன்எஸ் சென்னை போர்க்கப்பல் பின் தொடர்ந்து, சரக்கு கப்பலைவிட்டு கொள்ளையர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என, ஹெலிகாப்டர் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

சரியாக ஜனவரி 5 மதியம் 3.15 மணிக்கு கப்பலில் இறங்கிய கமாண்டோ படையினர் கப்பலை தங்கள் கட்டுபாட்டுக்கு கொண்டு வந்தனர். இந்திய கடற்படையினர் விடுத்த எச்சரிக்கையை அடுத்து, கடற்கொள்ளையர்கள் சரக்கு கப்பலைவிட்டு தப்பிவிட்டதாக தெரிகிறது.

அண்மை காலமாகவே ஒருசில பகுதிகளில் கடற்கொள்ளையர்களின் அட்டூழியங்கள் அதிகரிப்பதாக வெளிநாட்டு பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன. சமீபத்திய ஆண்டுகளில் கப்பல்களை வழிமறிந்து ஆயுதமேந்திய கொள்ளைகள் நடப்பதும் அதிகரித்துள்ளன. 2010 கால கட்டங்களில் ஆண்டுக்கு கிட்டதட்ட 500 சம்பவங்கள் கடற்கொள்ளையர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளன.

2020 கால கட்டங்களில் ஆண்டுக்கு 200ஆக இருக்கின்றன. அதிலும் குறிப்பாக அப்ரிக்காவின் நைஜிரியா பகுதியான கினியா வளைகுடா பகுதியில், 2018ல் 82 குற்ற சம்பவங்களும், 2020ல் 84 ஆகவும், 2021ல் 35 ஆகவும், 2022ல் 19 ஆகவும் இருந்திருக்கின்றன. அந்த பகுதிகளில் 2020ம் ஆண்டில் 2 கப்பல்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள் உலகளவில் கவனம்பெற்றன, இந்தியாவை சுற்றியுள்ள இந்திய பெருங்கடல் மற்றும் அரபிக் கடல் பகுதிகள் பாதுகாப்பானதாகவே கருதப்படுகின்றனர்.

ஆனால் சோமாலியா வழியாக செல்லும் கப்பல்களுக்கு பலவிதமான அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுவது தொடர் கதையாகிவிட்டது. முந்தைய ஆண்டுகளில் சோமாலிய கடற்கொள்ளையர்களின் தாக்குதல்கள் குறிப்பிடத்தக்க அளவில் இல்லையென்றாலும், சோமாலிய கடற்கொள்ளையர்கள் இன்னும் ஏடன் வளைகுடா பகுதியில் தாக்குதல்களை நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். 2017ம் ஆண்டு இந்தியாவின் சரக்கு கப்பலை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கைப்பற்றினர் என்பது குறிப்பிடதக்கது.

"இந்திய கடற்பகுதியில் கப்பல் மீதான டிரோன் தாக்குதல்; இரானில் இருந்து நடத்தப்பட்டது பென்டகன்

"இந்திய கடற்பகுதியில் கப்பல் மீதான டிரோன் தாக்குதல்; இரானில் இருந்து நடத்தப்பட்டது பென்டகன்

கடற்கொள்ளையை தடுப்பதற்காக பல நாடுகளில் கடல்சார் ஆணையம் ஆபத்தான பகுதிகள் எவை, பாதுகாப்பான பகுதிகள் எவை என பிரிப்பதுடன், கடற்கொள்ளையர்கள் தாக்க முற்பட்டால் உடனடியாக செய்ய வேண்டியதென்ன என்ற விழிப்புணர்வுகள் வழங்கப்படுகிறது. அதேசமயம் கடத்தப்பட்ட கப்பல்களை உரியமுறையில் மீட்கும் அம்சங்களையும் உலக நாடுகள் மேம்படுத்திக் கொள்கின்றனர்.!

**அண்மை காலமாகவே ஒருசில பகுதிகளில் கடற்கொள்ளையர்களின் அட்டூழியங்கள் அதிகரிப்பதாக வெளிநாட்டு பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன. சமீபத்திய ஆண்டுகளில் கப்பல்களை வழிமறிந்து ஆயுதமேந்திய கொள்ளைகள் நடப்பதும் அதிகரித்துள்ளன. 2010 கால கட்டங்களில் ஆண்டுக்கு கிட்டதட்ட 500 சம்பவங்கள் கடற்கொள்ளையர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளன.**



# தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கான முதலீட்டு தளமாக மாற்றப்படுகிறதா பூநகரி?

## செல்வராஜா கஜேந்திரன் கேள்வி



பூநகரி அபிவிருத்தி திட்டம் தொடர்பில் அப் பகுதி மக்களுடன் கலந்துரையாடப்பட வில்லை. மாறாக ரணில் அரசின் தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கான முதலீட்டு தளமாக மாற்றப்படுகிறதா என்ற கேள்வி எழுவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்ற மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 19 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வில் கலந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணில் விக்கிரமசிங்க வடக்கிற்கு விஜயம் செய்து பெரிய ஏமாற்று நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார். பூநகரியில் அபிவிருத்தி திட்டம் செய்யப் போவதாக அங்கு கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளார். 500 மில்லியன் ரூபா அவசர அவசரமாக ஒதுக்கப்பட்டு பூநகரி அபிவிருத்தி என்ற பெயரில் அது அரங்கேற்றப்படுகின்றது. அந்த அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் அந்தப் பிரதேசத்து மக்களுடன் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த 2 ஆம் திகதி பூநகரி பிரதேச சபை மண்டபத்தில் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபையால் ஒழுங்குபடுத்தப்பட்ட அந்தக் கூட்டத்தில் வடமாகாண அதிகாரிகள் கலந்து கொண்டனர். அந்தத் திட்டத்தை அப்போது விளங்கப்படுத்த முற்பட்டிருந்தார்கள். அந்தத் திட்டம் தயாரித்து அவர்கள் கொண்டு வந்திருந்தார்கள். அந்தத் திட்டம் தயாரிப்பதற்கு முன்னதாக அந்த பிரதேசத்து மக்களுடன் எந்தவிதமான கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்தக் கூட்டம் சிவில் அமைப்புக்களுடன் எனக் கூறப்பட்டாலும்வெறும்ஈபிடிபி ஆதரவாளர்கள் 8-10 பேருடன் தான் அந்தக் கூட்டம் நடைபெற்றது.

ஏனையவர்கள் அனைவரும் திணைக் களங்களைச் சேர்ந்த உத்தியோ கத்தர்களாக இருந்தார்கள். அந்த அபிவிருத்தி அந்த பிரதேசத்திற்கு பொருமத்தமானதா இல்லை எனக் கருத்துச் சொல்லக் கூடிய எவரும் அங்கு கலந்து கொண்டிருக்கவில்லை. பூநகரி, பொன்னாவெளி என்ற இடத்தில் ஒரு சில வருடங்களாக சீமெந்துக்காக சுண்ணக்கல் அகழ்தல் தொடர்பான பிரச்சினை போய் கொண்டு இருகின்றது. அகழ்வுக்கு எதிராக மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களும் அந்த பூநகரிப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள். அந்த பிரதேசத்தைச் சேர்ந்த கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பாலாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த எவரும் அந்தக் கூட்டத்தில் அழைக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல் பல கிராமங்களில் உள்ள பொது அமைப்புக்களைச் சார்ந்தோர் அழைக் கப்படவில்லை.

முன்னர் பூநகரி பிரதேச சபை தவிசாளராக இருந்தவர் கூட அழைக்கப்படவில்லை. ஆனால் 2023 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட தேர்தலில் ஈபிடிபி சார்பில் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டவர்களே அழைக்கப்பட்டிருந்தார்கள். அவ்வாறானவர்களே பல அபிவிருத்தி கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டு அவர்கள் மூலம் குழப்பங்களும் அச்சுறுத்தல்களும் ஏற்படுத்தப்படுகின்றது. எதிர் கருத்துக்களை சொல்ல முடியாத நிலை ஏற்படுத்தப்படுகிறது.

ஆகவே 500 மில்லியன் ரூபா அபிவிருத்தி என்பது வெறுமனே வாடியடியை மையப்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது. 30 ஆண்டுகள் யுத்தம் நடந்துள்ளது. அபிவிருத்தியில் 50 ஆண்டுகள் பின்னோக்கி நிற்கிறோம். அப்படிபட்ட நிலையில பூநகரியை அபிவிருத்தி செய்வதாக இருந்தால் வெளியில் உள்ள மக்கள் அங்கு வந்து மீள்குடியேறுவதற்கான உட்கட்டுமான வசதிகள் தேவை. அது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

கடற்கரையோரமாக காற்றாளைகள் அமைக்கப்படுகின்றன. காற்றாளை அமைப்பதில் பொது மக்களுக்கு உடன்பாடில்லை. அவர்களது நிலம் பாதிக்கபடுவதாக மக்கள் குற்றம் சாட் டுகிறார்கள். கடற்கரையோரமாக அட்டைப் பண்ணைகள் வழங்கப்பட்டுவருகின்றன. அட்டைபண்ணை வழங்குவதால் கரையோர மீன்பிடி பாதிக்கப்படுகிறது. மீன்பிடி இறக்கு துறைகள் புனரமைக் கப்படுவதாகக் கூறப்படுகிறது. ஒரு புறம் கடற்தொழில் அழிக்கப்பட்டு கடல் அட்டை பண்ணைகள் வழங்கப்படுகின்றன. மறுபுறம் இறங்கு துறைகள் அமைக்கப்படுகின்றன என்றால் பூநகரி மக்களின் பொருளாதாரத்திற்காக திட்டங்கள் போடப்படுகிறதா அல்லது ரணில் அரசின் தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கான முதலீட்டு தளமாக இது மாற்றப்படுகின்றதா என்ற கேள்வி எழுகிறது.

பூநகரி அல்லது கிளிநொச்சி அல்லது வடக்கைச் சேர்ந்தவர்களுக்கு அங்கு முதலீடுகளை செய்வதற்கும், வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கும் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டங்கள் இருகின்றதா என்றால் இல்லை. விடுதிகள் அமைக் கப்படவுள்ளன என அந்தத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த விடுதிகளுக்குரிய காணிகள் யாருக்கு வழங்கப்படப் போகின்றன. அதன் முதலீட்டாளர்கள் யார் என்பது வெளிப்படுத்தப்படவில்லை. அங்கே பாரிய சந்தேகம் இருக்கிறது. ஒரு விவசாய பிரதேசம் எப்படி நகர அபிவிருத்தி பிரதேசமாகத் தெரிவு செயயப்பட்டுள்ளது என்ற கேள்வி எழுகிறது. பூநகரி பிரதேசம் முழுமையாக அதில் உள்வாங்கப்படவில்லை. அந்த பிரதேசத்திற்கான ஒரு முழுமையான திட்டமாக அது வகுக்கப்பட்டிருந்தால் அது பொருத்தமானதாக இருக்கும். ஆனால் அப்படியல்ல.

ஏற்கனவே இவ்வாறான கவர்சிகரமான அபிவிருத்தித் திட்டங்களை பற்றி எமக்கு தெரியும். யாழ்ப்பாணம், மயிலிட்டி திட்டம் இலங்கை மீன் உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கை வழங்கியிருந்தது. அந்த மயிலிட்டி துறைமுகம் 2017 ஆம் ஆண்டு இதே ரணில் பிரதமராக இருந்த போது முன்னுரிமை காட்டி அந்த துறைமுகம் அபிவிருத்தி செய்வதாக கூறி மக்களிடம் இருந்த துறைமுகம், மத்திய துறைமுக அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டது. முதல் கட்ட அபிவிருத்தி பிற்பாடு அந்த மக்கள் தொழில் செய்த நிலங்களை இழக்க வேண்டி வந்தது. அது போல தான் பூநகரி அபிவிருத்தித் திட்டமும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் தலைமையில் இடம்பெற்ற மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு தின நிகழ்வில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வவுனியா மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swebpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ரணிலின் வடக்குப் பயணம் பயனற்றதொரு நாடகமே

## யாழ்ப்பாணத்தில் பிமல் ரட்ணாயக்க தெரிவிப்பு



ஜனாதிபதியின் வடக்கு விஜயம் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாத -மக்களின் வரிப்பணத்தை வீணடித்த-வெற்றுபயணமாகவே அமைந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்ணாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்உள்ள தேசிய மக்கள் சக்தியின் கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் அடிப்படை வசதிகள் இன்னும் பூர்த்தி செய்யாத வகையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

காணி விடுவிப்பு, மீள் கட்டுமானம், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வு மற்றும்அரசியல்பிரச்சினைக்கான தீர்வு என தமிழ் மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான ஒரு நிலையில் வடமாகாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஒரு துண்டு காணியேனும் அந்த மக்களுக்கு விடுவித்துக் கொடுக்கவில்லை.

நான் கொழும்பிலிருந்து வருகை தரும்போது வடக்கு அதிகாரிகள் சிலருடன் கதைத்தேன் ஜனாதிபதி விஜயம் அவ்வாறு இருந்தது என அவர்கள் கூறினார்கள் வாகனப் பவனியை கண்டுஇரசித்ததாகக்கூறினார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ். விஜயத்தை எதிர்த்துயாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகில்போராட்டம்நடைபெற்றது.

ஜனநாயக வழியில் தமது எதிர்ப்பைத் தெரிவித்த போராட்டக்காரர்களை பொலிஸார் இழுத்துச் சென்றதையும் தாக்குதலுக்கு தயாராக இருந்த பொலிஸாரையும் ஊடகங்களின் ஊடாகப் பார்த்தேன்.

நாட்டை அதல பாதாளத்திற்கு கொண்டுசென்றமுன்னாள்ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி கதிரையிலிருந்து மக்கள் விரட்டியடித்த போது ரணில் விக்கிரமசிங்க பின் கதவால் ஜனாதிபதியானார்.

நாட்டை முன்னேற்றப் போகிறேன் எனக் கூறிக்கொண்டு நாட்டு வளங்களை வெளிநாட்டுக்கு தாரைவார்க்கும் செயற் பாட்டில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகிறார்.

நாட்டைப்பாதுகாப்பதற்காக பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்பினர் மேற்கொள்ளும் போராட்டங்களை பாதுகாப்பு தரப்பினர் மூலம் அடக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார். எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என அரசமைப்பு கூறுகின்றது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி கதிரையில் மீண்டும் அமர்வதற்காக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காது வடக்குக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ளார். வட மாகாணத்தின் வளம் மிக்க பகுதிகளான மன்னார், பூநகரி, தீவகம் போன்ற பகுதிகள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு இருக்கும் நிலையில் அப் பிரதேச மக்களின் கோரிக்கைக்கு ஜனாதிபதி பதிலளிக்கவில்லை. நாடு பொருளாதார ரீதியில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் நிலையில் ஜனாதிபதி ஆடம்பரமாக வாகன தொடரணிகள் சகிதம் வருகை தந்து நான்கு நாள்கள் வடக்கில் முகாமிட்டமை மக்களின் பிரச்சினையைத் தீர்க்க அல்ல எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரமே என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# நாணய நிதியத்தின் அதிகாரிகள் அடுத்த வாரம் இலங்கை வருகை

நாட்டின் சமகால பொருளாதார நிலைவரம்தொடர்பில்மதிப்பீட்டைமேற்கொள்வதற்காகசர்வதேசநாணயநிதிய அதிகாரிகள் குழுவினர் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

நாட்டின் அண்மையகால பொருளாதார நிலைவரம் குறித்தும், சர்வதேச நாணய நிதியத்தால் வலியுறுத்தப்பட்ட பொருளாதார மறுசீரமைப்பு செயற்திட்டங்களின் அடைவுகள்மற்றும்முன்னேற்றங்கள் குறித்தும் மதிப்பீடு செய்வதற்காகவே இக்குழு வருகைதரவிருப்பதாக நிதியமைச்சின்சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தின்கீழ் இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர் கடனை வழங்குவதற்கான முன்மொழிவுக்கு கடந்த ஆண்டு மார்ச் 20 ஆம் திகதி நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை ஒப்புதலளித்தது. அதன்பிரகாரம் முதற்கட்டமாக330மில்லியன்டொலர் கடன்நிதிஇலங்கைக்குவழங்கப்பட்டது.

இந்நிலையில் இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட முதலாம் கட்ட மதிப்பீட்டுக்கு கடந்த மாதம் 12 ஆம் திகதி அனுமதி வழங்கிய நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை, அதன்மூலம் இரண்டாம் கட்டமாக 337 மில்லியன் டொலர் நிதியை விடுவிப்பதற்குஇணக்கம்தெரிவித்தது.

இவ்வாறானதொரு பின்னணியில்இலங்கைதொடர்பானஇரண்டாம் கட்ட மதிப்பீட்டை இவ்வருடத்தின் முதல் அரையாண்டுக்குள் நிறைவுசெய்வதற்கு உத்தேசித்திருக்கும் நிலையில், எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள சர்வதேச நாணயநிதிய அதிகாரிகளின் விஜயம் முக்கியத்துவம்வாய்ந்ததாகஅமைந்திருக்கின்றது.

அதேவேளை இரண்டாம் கட்ட மதிப்பீட்டுக்கு முன்பதாக இலங்கை அதன் உத்தியோகபூர்வ மற்றும் தனியார் கடன்வழங்குநர்களுடன் கடன்மறுசீரமைப்பு தொடர்பில் இணக்கப்பாடொன்றை எட்டவேண்டியது அவசியமாகும். (05)

# 5 டிப்பர் வாகனங்களும் சாரதிகளும் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் கைது



கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு மற்றும் மயில்வாகரபுரம் பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 5 டிப்பர் வாகனங்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய வீதி சோதனைகளின் மூலம் குறித்த கைது இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சாரதிகள் பொலிஸ் விசாரணைகளின் பின்பு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## ஷேக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பியுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பங்களாதேஷ் மக்களுக்குஷேக்ஹசீனாவழங்கிய சேவையும் தொலைநோக்கு பார்வையும் கொண்ட தலைமைத்துவமே இந்த மாபெரும் வெற்றிக்கு உறுதுணையாக இருந்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

ஷேக் ஹசீனாவின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான நெருங்கிய நட்புறவுமிக்க இருதரப்பு உறவுகள்வலுப்பெற்றுள்ளதாகதனது வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, எதிர்காலத்தில் இரு நாட்டு மக்களுக்கும் பரஸ்பர நன்மைகள் ஏற்படும் விதத்தில் அந்த உறவுகள் மேலும் விரிவுபடுத்த எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஷேக் ஹசீனாவை விரைவில் இலங்கைக்கு வருகை தருமாறு தனது வாழ்த்துச் செய்தியில் அழைப்பு விடுத்துள்ள ஜனாதிபதி, இலங்கைக்கும் பங்களாதேஷிற்கும் இடையிலான அரசியல், பொருளாதார, கலாசார உறவுகளை மேம்படுத்தவும், இரு நாடுகளுக்கிடையிலானபரஸ்பரநம்பிக்கை மற்றும்நட்புறவை வலுப்படுத்தவும் இந்த விஜயம் உதவும் எனவும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஷேக் ஹசீனா மூலம் இலங்கைக்கு, பங்களாதேஷ் வழங்கிய தனித்துவமான உதவிகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, ஷேக் ஹசீனாவின் இலங்கை மற்றும் மக்கள் மீதான அக்கறை மற்றும் நல்லெண்ணத்தையும்பாராட்டினார்.

பங்களாதேஷ் மக்களின் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்துக்காக உழைக்க பிரதமர் ஷேக் ஹசீனா சிறந்த ஆரோக்கியத்துடன்இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அவரது எதிர்கால முயற்சிகளுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

## விடுவிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தினை கறுப்பு நாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் இருந்து கிழக்கு நோக்கி இடம்பெற்ற பேரணியில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான, சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.கே. சிவாஜிலிங்கம், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட எழு பேரும் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

தேர்தல் காலத்தில் போராட்டம் நடத்தியமை, பொது மக்களுக்கு இடையூறுஏற்படுத்தியமைஉள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த 7 பேருக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன், கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக வருகைதந்த ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகள் உள்ளிட்டசிலருக்குஎதிரானவழக்கு விசாரணையும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது.

குறித்த இரண்டு வழக்குகளும் யாழ்ப்பாணம் நீதவான்

தொடர்ச்சி 9ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

## வலி. நிவாரணி எனப் போதை மாத்திரைகளை விற்ற மருந்தக ஊழியர் உட்பட இருவர் கைது

வலிநிவாரணிமாத்திரைகள்எனக் கூறிபோதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படும்மருந்தகத்திலிருந்து250 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதோடு, மருந்தகத்தின் ஊழியர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், போதை மாத்திரைகளுடன் நடனமாடிய மேலும் ஒருவர் கைதாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் இருவரிடமிருந்தும் 1,100 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த மருந்தகத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை மருந்தகத்தில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இரண்டு பெட்டிகளில் 250 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

இந்தமாத்திரைகள், வலிநிவாரணி மாத்திரைகள் என்ற பெயரில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளதாகக் கூறும் பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரையும் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர். (05)

## யாழில் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையான பெண்ணுக்கு மறியல்

யாழ்ப்பாணத்தில் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையான இளம் பெண்ணொருவர் பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பகுதியில் இரவுவேளை சந்தேகத்திற்கு இடமான முறையில் நடனமாடிய குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த பொலிஸார் அப்பெண்ணை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி முன் முற்படுத்தி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவர் போதைக்கு அடிமையானவர் எனக் கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அப்பெண்ணிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் , தாய், தந்தையர் இல்லாத நிலையில், பேத்தியுடன் வாழ்ந்து வருவதும் இவர் அண்மைக்காலமாக ஐஸ் போதைக்கு அடிமையாகி உள்ளமையும் தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை , அப்பெண்ணை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (05)

## வீதியை விட்டு விலகி வீட்டை மோதிய லொறி

### சிறுவன் உயிரிழப்பு; இருவர் காயம்

பெலவத்தை நெலுவ வீதியில் தேயிலை ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறியொன்று வீதியை விட்டுவிலகி அருகில் உள்ள வீடு ஒன்றில் மோதியதில் ஆறு வயதான சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் சாரதியும் நடத்துநரும் காயமடைந்துள்ளனர் என தினியாவல பொலிஸார் தெரிவித்தனர். யட்டபான பகுதியில் வசிக்கும் ஆதித்ய புன்சரா என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

பெலவத்தையிலிருந்து தினியாவல நோக்கி சென்ற லொறி யட்டபாத பகுதியில் வைத்து விபத்துக்குள்ளாகியுள்ளது. காயமடைந்த லொறியின் சாரதி மற்றும் நடத்துநர் மேகதன்ன வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், தினியாவல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## மாவா பாக்குடன் பெண் கைது

யாழில் கஞ்சா கலந்த மாவா பாக்கை விற்பனை செய்த சந்தேகத்தில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், துன்னாலை கிழக்கைச் சேர்ந்த குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்ததுடன் அவரது உடைமையில் இருந்து ஒரு தொகை கஞ்சா கலந்த மாவா பாக்கையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட பெண்ணை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

## போலி நோட்டுக்களை பயன்படுத்தி போதைப் பொருள்கள் கொள்வனவு

### இருவர் கைது

1,000 ரூபா போலி நோட்டுக்களை அச்சிட்டு அவற்றை பயன்படுத்தி போதைப்பொருள் வாங்கியதாக கூறப்படும் இருவர் போலி நோட்டுக்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள்மாளிகாவத்தைமற்றும் தெமட்டகொடை பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர்.

சந்தேக நபர்கள் இருவரும் இவ்வாறு போலி நோட்டுக்களை அச்சிட்டு போதைப்பொருள் கொள்வனவுசெய்துவந்துள்ளனர்எனவிசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட மாளிகாவத்தை பொலிஸார் சந்தேக நபர்களிடமிருந்து 1000 ரூபா பெறுமதியான 4 போலி நோட்டுக்களைக் கைப்பற்

## முகக்கவசம் அணியுமாறு அறிவுறுத்தும் பொலிஸார்

ஹோமாகம கட்டுவன கைத்தொழில் பேட்டைக் கிராமத்தில் சில மாதங்களுக்கு முன்னர் இரண்டு தடவைகள் தீப்பிடித்த குளோரின் உற்பத்தி தொழிற்சாலையில் மீண்டும் புகை பரவி வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் பனிமூட்டம் காரணமாக குளோரின் கலந்துள்ளதாக ஹோமாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலை ஊழியர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அனைவரும் முகக்கவசம் அணிந்து பணியில் ஈடுபட வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சூரிய ஒளி சரியாகப் பட்டால் இந்நிலை தவிர்க்கப்படும் எனவும், அதுவரை புகை மூட்டமாக காணப்படுவதால் முகமூடிகளை முறையாக அணிந்து செயற்படுமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் மூச்சு விடுவதில் சிரமம் உள்ளவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (05)

## மானிப்பாயில் கைதான 2 இளைஞர்கள் கந்தக்காட்டு புனர்வாழ்வு முகாமுக்கு

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போதைப்பொருளுடன் கைதான இரு இளைஞர்களையும் மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 24 மற்றும் 25 வயது இளைஞர்களை சட்டவைத்திய அதிகாரி முன் முற்படுத்தி மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது இருவரும் போதைக்கு அடிமையானவர்கள் எனக் கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேலதிக விசாரணைகளின் பின்னர் , மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் இரு இளைஞர்களையும் முற்படுத்திய வேளை அவர்களைக் கந்தக்காடு மறுவாழ்வு மையத்திற்கு அனுப்புமாறு மன்று உத்தரவிட்டது. (05)

## யுக்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட பல்வேற தரப்பினரும் தமது கரிசனைகளை வெளிப்படுத்திவரும் நிலையில் இந்த ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றுள்ளது.

'யுக்திய' செயற்திட்டத்தினால் பல்வேறு வழிகளிலும் அநீதிக்கு முகங்கொடுத்த 32 பேர் இணைந்து திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இதன்போது அவர்கள் 'நீதிக்கான செயற்திட்டமா? அல்லது அநீதிக்கான செயற்திட்டமா?', 'உண்மையான சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்' என்பன உள்ளடங்கலாக 'யுக்திய' செயற்திட்டத்தை கேள்விக்குட்படுத்தும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

கவனயீர்ப்புப் போராட்டத்தின் முடிவில் அவர்கள் கையளித்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

சட்டத்தின் ஆட்சி இல்லாவிடின், அந்நாட்டுப் பிரஜையின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது. அதன்படி இலங்கைக் குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நீங்கள் உடனடியாகத் தலையீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இக்கடிதத்தை எழுதியிருக்கின்றோம்.

தற்போது இலங்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுவரும் 'யுக்திய' நடவடிக்கையின்போது பல்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டம் பின்பற்றப்படாமையினை அவதானிக்கமுடிகின்றது. குறிப்பாக அரசமைப்பு மற்றும் குற்றவியல் சட்டத்தின் அடிப்படை அம்சங்களை முற்றுமுழுதாகப் புறக்கணித்து செயற்படுவது மிகவும் துரதிஷ்டவசமான விடயம் என்பதுடன், இதன் விளைவாக நாட்டின் சட்டக்கட்டமைப்பு புறந்தள்ளப்படுகின்றது.

எனவே உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் இலங்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுவரும் 'யுக்திய' நடவடிக்கை குறித்து கண்காணிக்குமாறும், நாட்டின் ஜனநாயகம் மற்றும் பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படக்கூடியவகையில் இந்நடவடிக்கைகயில் ஈடுபடுவதற்கு அவசியமான ஆலோசனைகளை பொலிஸாருக்கு வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## டின் இலக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சியம்பலாபிடிய தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டின் இறுதியில் 1,705,233 ஆக இருந்த வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டின் இறுதியில் 437,547 ஆகக் குறைந்துள்ளது. எமது ஆட்சியின் புதிய கொள்கைகளால், டிசெம்பர் 31, 2023ஆண்டுக்குள் வரிக் கோப்புகளின் எண்ணிக்கையை 1,002,029 ஆக உயர்த்த முடிந்தது. நாம் அந்தத் தொகையை மேலும் அதிகரிக்க வேண்டும்.

அத்துடன், கடந்த வருட இறுதிக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதமாக இருந்த அரச வருமானத்தை 10 வீதமாக அதிகரிக்க முடிந்தது. 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் அதை 12 சதவீதமாக உயர்த்த இலக்கு வைத்துள்ளோம். ஓரளவு நிலையான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக மாறுவதற்கு 2025ஆம் ஆண்டளவில் 15 சதவீதமாக அதனை அதிகரிக்க எதிர்பார்க்கிறோம்.

மேலும், வற்வரிக்கு சில திருத்தங்கள் செய்யப்படுகின்றன. இதுவரை 15 சதவீதமாக இருந்த வற் வரி 18 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 80 மில்லியன் ரூபாவாக இருந்த வற் வரி எல்லை 60 மில்லியன் ரூபாவாக அமையும். 2001 இல் வற் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகள் வற் வரிக்கு உட்பட்டது. அதில் குறைந்த எண்ணிக்கையினாலான பொருட்களுக்கு வரித் திருத்தச் சட்டத்தின் ஊடாக விலக்களிக்கப்பட்டன. விலக்கு அளிக்கப்பட்ட 138 பொருட்கள் மற்றும் சேவைகளில், 97 வகையானவை இந்தத் திருத்தத்தில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளன.

வற்வரி திருத்தத்தின் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தி 645 பில்லியன் ரூபாய். வரி விகிதங்களின் அதிகரிப்புடன் பணவீக்கம் 2.5 சதவீதத்தினால் அதிகரிக்கும் என மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுப் பிரிவு பகுப்பாய்வு செய்துள்ளது. மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதன் மூலம் பணவீக்கத்தை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் மீண்டும் 5 சதவீதத்துக்குக் கொண்டுவர முடியும் என மத்திய வங்கியும் நிதி அமைச்சும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

70 சதவீத பணவீக்கம் இருந்த நாட்டில் தற்போது 5 சதவீத பணவீக்க விகிதத்தை பேணவே நாம் முயற்சிக்கிறோம். அத்துடன், இந்த நெருக்கடி நிலையிலும் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தை அதிகரிக்க ஆளும் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. இது எமது நிதி முகாமைத்துவத் திறன்களின் தனித்துவமான அம்சமாகும்.

இன்று நேரடி வரிகள் 30 சதவீதமாகவும் மறைமுக வரிகள் 70 சதவீதமாகவும் உள்ளன. இந்த வரி விகிதத்தை மாற்றி, நேரடி வரி விகிதத்தை 40 சதவீதத்துக்குக் கொண்டு வருவதே எமது இலக்கு. உலகில் அபிவிருத்தி அடைந்த ஒரு நாட்டின் நிலை அதுவேயாகும். வரி செலுத்தக்கூடிய பலம் வாய்ந்த 10 மில்லியன் மக்கள் உள்ளனர், ஆனால் தற்போது 5 இலட்சம் பேர் மட்டுமே வரி செலுத்துகின்றனர். எனவே, வரி ஏய்ப்பு செய்பவர்களை கண்டறிந்து, அவர்களை வரி வலைக்குள்ளே கொண்டு வர வேண்டும். பின்னர் மறைமுக வரிகளைக் குறைக்க முடியும்.

பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து டின் இலக்கத்தை அமுல்படுத்தத் தயாராகி வருகிறோம். தற்போது அதனைப் பதிவுசெய்வதில் சிக்கல்கள் உள்ளன. மக்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாக உள்ளதால்தான் அந்தப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. எனவே பிரதேச செயலக மட்டத்தில் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஆலோசித்து வருகிறோம். அதனை ஒன்லைன் முறை மூலம் செயற்படுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

வரி செலுத்துபவர் ஒரு நாட்டில் ஸ்திரத்தன்மையை அடைந்த வலிமையான பிரஜை என்பது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் வளர்ச்சிக்கு இவ்வாறு மக்களின் மனப்பான்மையை மாற்றுவது முக்கியம். எனவே இத்திட்டம் வெற்றியடைய அனைவரின் பங்களிப்பும் எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

## சுதந்திரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினை மீளப் புணரமைப்பதற்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்குள் நாம் முக்கிய அறிவிப்பை மேற்கொள்ளவுள்ளோம். நிச்சயமாக அந்த அறிவிப்பு புதிய மாற்றத்தினை ஏற்படுத்துவதாக இருக்கும் என்றார்.

## தென்னிந்தியாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாசாரம், பராம்பரிய விழுமியங்களை சர்வதேச சமூகத்திடம் எடுத்துச் சென்று நாம் ஒரு தனித்துவமான தேசிய இனம், எமக்கான சட்டபூர்வமான உரிமைகள் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்னும் கருப்பொருளுடன் இந் நிகழ்வினை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம். கடந்த பல வருடங்களாக பல தரப்பட்ட தளத்தில் இருந்து குறிப்பாக பிரித்தானியாவின் ஆளும் கட்சி, எதிர் கட்சி மற்றும் ஏனைய கட்சி உறுப்பினர்களிடமிருந்து எமக்கான ஆதரவு கிடைக்கப்பெற்று வருகிறது.

இந் நிலையில் பிரித்தானிய அரசின் அதிகாரபூர்வமான அங்கீகாரத்துக்கான அடுத்த கட்ட நடவடிக்கையாக, சென்ற வருடத்தில் தொடங்கிய முயற்சியினால் பல்வேறு தமிழ் அமைப்புகளுடன் கூட்டாக இணைந்து முறைப்படியான விண்ணப்பம் ஒன்றினை பிரித்தானிய பிரதமரிடம் முதல்கட்ட நடவடிக்கையாக தற்போது சமர்ப்பித்துள்ளோம்.

இவ்வங்கீகாரத்தின் மூலம் தமிழர்கள் சிறுபான்மை இனம் அல்ல, எமக்கான நீண்ட நெடிய வரலாறு, தனித்துவமான கலாசாரம், பண்பாடுகள் உள்ளன என்பதனை உலகறிய செய்ய முடியும் என்பதுடன் இனவழிப்பிற்கு உட்படுத்தப்படும் எம் மக்களின் தனித்துவத்தைப் பேணும் முறையான அரசியல் தீர்வுக்கு இவ்வாறான அங்கீகாரம் உறுதுணையாக இருக்கும் என்பது எம் நம்பிக்கை.

இச்செயற்பாட்டுக்கு ஒப்பம் தந்து தம்மையும் இவ் விண்ணப்பத்தில் இணைந்து கொள்ள விரும்பும் தமிழர் நலன் பேணும் பிரித்தானியா அமைப்புக்கள், தமிழ் பாடசாலை நிர்வாகங்கள், பழைய மாணவர் சங்கங்கள், ஊர்ச் சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஆலய நிர்வாகங்கள் எம்மை தொடர்பு கொண்டு எமக்கான இவ் அங்கீகார முன்னெடுப்புக்கு ஆதரவு நல்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

## விடுவிப்பு...

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (08) எடுத்துகொள்ளப்பட்டது.

வழக்கு தொடர்பாக பொலிஸார் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற வேண்டும் என தெரிவித்த போது பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி இரண்டு வழக்குகளையும் கிடப்பில் போட்டு அனைவரையும் விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து இரண்டு வழக்கையும் கிடப்பில் போட்ட நீதிமன்றம் பிரதிவாதிகள் அனைவரையும் விடுதலை செய்து உத்தரவிட்டது.


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir

# முடிந்தால் வடக்குக் கிழக்கிற்கு மட்டுமாவது மாகாணசபை தேர்தலை நடத்தி காண்பிக்குக

## ஜனாதிபதி ரணிலிக்கு சுரேஷ் சவால்



13 ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக கருத்துக்களை வெளியிட்டுவரும் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க, முதலில்வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமாவது தேர்தலை நடத்திக் காண்பிக்குமாறு சவால் விடுப்பதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்களை முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முதலில் தமிழர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதோடு தமிழர்களைத் தொடர்ந்தும் ஏமாற்றும் வகையில் கருத்துக்களைப் பகிர்வதைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கிற்கான நான்கு நாள் விஜயம் மேற் கொண்டுள்ள நிலையில், 13 ஆவது திருத்தச்சட்டம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு போதுமானது என்றும், புலம்பெயர் தமிழர்கள் முதலீடுகளை செய்வதற்கு வருகை தரவேண்டுமென்றும் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பில் கூறுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க, வடமாகாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டு பல்வேறு விடயங்களைக் கூறுகின்றார். அவருடைய கூற்றுக்களும், செயற்பாடுகளும் அவர் ஜனாதிபதி தேர்தலுக்கான தனது பிரசாரத்தின் ஆரம்பத்தை வடக்கிலிருந்து தொடங்குகின்றார் என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இதேநேரம், ஜனாதிபதி பொருளாதார அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு 13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் போதுமானவை என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அவரது இந்தக் கருத்து அடிப்படையற்றதாகும். நாட்டின் நீடித்த இனமுரண்பாடுகளை அடுத்தே இந்திய, இலங்கை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அரசமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது என்பது வரலாறு. அவ்வாறான நிலையில், குறித்த திருத்தச்சட்டம் பொருளாதார அபிவிருத்திக்கானது என்று ஜனாதிபதி அர்த்தப்படுத்த முனைவது தவறானதாகும்.

அதேநேரம், மாகாண சபைகளின் ஆயுட்காலம் நிறைவடைந்து ஐந்தாண்டுகளுக்கும் அதிகமான காலம் கடந்த நிலையில் இன்னமும் தேர்தல் நடத்தப்படாது தாமதிக்கப்படுகின்றது. முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபைகள் இயங்க வேண்டும். அப்போதுதான் மாகாண சபைகள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்த முடியும்.

அதேநேரம், கடந்த காலங்களில் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் பல்வேறு வழிகளில் மத்திய அரசாங்கத்தால் மீளப்பெறப்பட்டுள் ளது. ஆகவே, அந்த அதிகாரங்களை மீள வழங்குவ தற்கு ஜனாதிபதி நட வடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

இந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்காத நிலையில் பொருளாதார அபிவிருத்தியைஎவ்வாறு மாகாண சபைகளின் நிர்வாகத்தால் முன்னெடுக்க முடியும் என்ற கேள்விகள் காணப் படுகின்றன.

அதுமட்டுமன்றி, ஜனாதிபதி புலம்பெயர் தமிழர்களை முதலீடுகளைச் செய்யுமாறு அழைப்பு விடுகின்றார். புலம்பெயர் தமிழர் கள் தமது மாகாணங்களில் முதலீடுகளைச் செய்வதற்கான சட்ட ஏற்பாடுகளை முதலில் உருவாக்கி அந்த அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்க வேண்டும்.

அவ்வாறில்லாது, புலம்பெயர் தமிழர்கள் தென்னிலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு முன்வரமாட்டார்கள். ஏனென்றால் 1983 ஆம் ஆண்டு தமிழர்களையும் அதற்குப் பின்னர் அண்மைக்காலத்தில் முஸ்லிம்களையும் இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் அந்தந்த இனங்களில் பிரபல்யமான வர்த்தகர்களின் நிலைமைகள் எவ்வாறு மோசமடைந்தது என்பதை அனைவரும் அறிவார்கள்.

ஆகவே, இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்படுவது இங்கே முக்கியமானதாகின்றது. இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு காணப்படாத வரையில் தமிழர்களுக்கானபாதுகாப்புஉத்தரவாதங்கள் தென்னிலங்கையில் இல்லை. கடந்த காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கு இன்னமும் பொறுப்புக்கூறப்படாத நிலைமைகளும் நீடிக்கின்றன.

இவ்வாறான நிலையில், புலம்பெயர் முதலீட்டாளர்கள் எவ்வாறு முதலீடுகளை மேற்கொள்வதற்கு வருகை தருவார்கள் என்பதை ஜனாதிபதி சிந்திக்க வேண்டும். ஆகவே, ஜனாதிபதி உண்மையில் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளையும், மாகாண சபைகளின் ஊடான அபிவிருத்தியையும் விரும்புபவராக இருந்தால் ஆகக்குறைந்தது வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்காகவாவது தேர்தலை நடத்த வேண்டும். – என்றார்.(05)

## அமைச்சரின் சகோதரியின் வீட்டில் வைரத்தைத் திருடியவர் சிக்கினார்

அரசாங்கத்தின் சக்திமிக்க அமைச்சர் ஒருவரின் சகோதரியின் வீட்டுக்குள் நுழைந்து திருட்டில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நபர் ஒருவரை வத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பேலியகொடபிரதேசத்தைச்சேர்ந்த 48 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 3 நாள்களாக வீட்டுக்குள் நுழைந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இருப்பினும் கடந்த 3 ஆம் திகதி வீட்டுக்குள் நுழைந்த சந்தேக நபர், அங்கிருந்த நகைகள், வைரங்கள், இரத்தினக்கல் மோதிரங்களைத் திருடிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருடப்பட்ட பொருள்களின் பெறுமதி சுமார் ஒரு கோடியே பதின்மூன்று லட்சத்து நாற்பத்தைந்தாயிரம் ரூபா எனத் தெரியவந்துள்ளது.

கடந்த 3 ஆம் திகதி அதிகாலை ஒரு மணிக்கும் 4 மணிக்கும் இடையில் குறித்த வீட்டுக்குள் நுழைந்த இவற்றைத் திருடிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பின்னர் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், திருடிய பொருள்களை பேலியகொட ஒலியமுல்லபிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் வைத்துக் கைப்பற்றியதுடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர். சந்தேக நபரை வெலிசர நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (05)

## புதைக்கப்பட்டுள்ள யுவதியின் சடலம் தோண்டப்பட்டு நிர்வாணமாக மீட்பு

பண்டாரவளை பிரதேசத்தில் நியுமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த யுவதியின் சடலம் தோண்டப்பட்டு நிர்வாண நிலையில் காணப்பட்டுள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் ராஷ்மிகா நதிஷானி என்ற 25 வயது பெண்ணாவார்.

இவர் கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் நியுமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்த பெண்ணின் சடலம் புதைக்கப்பட்ட மயானத்துக்கு சென்ற தந்தை தனது மகளின் சடலம் தோண்டப்பட்டு நிர்வாண நிலையில் வெளியேற்றப்பட்டிருப்பதைக் கண்டுள்ளார். இதனையடுத்து இவர் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## கம்பஹாவிலுள்ள வீடொன்றில் பெண் ஒருவர் சடலமாக மீட்பு

*கம்பஹா, பெண்டியமுல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் கடந்த 5 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது. உயிரிழந்தவர் கம்பஹா, பெண்டியமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 82 வயதுடைய பெண்ணாவார்.*

*குறித்த பெண் சம்பவம் இடம்பெற்ற வீட்டில் தனிமையாக வசித்து வந்த நிலையில் கடந்த 5 ஆம் திகதி காலையில் விஹாரைக்கு சென்று மத வழிபாடுகளை நிறைவேற்றி வீடு திரும்பியுள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.*

*சொத்துக்களைதிருடுவதற்காக வீட்டுக்குள் நுழைந்த சில நபர்களால் இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.*

*இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*

## போதைப்பொருள் விசேட சுற்றிவளைப்புகளில் பொலிஸ் போக்குவரத்து பிரிவினரும் இணைவு

### பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக ஹப்புகொட தெரிவிப்பு



*போதைப்பொருள் தொடர்பில் தற்போது நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் விசேட சுற்றிவளைப்புக்களில் பொலிஸ் போக்குவரத்து பிரிவும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.*

*அதற்கமைய நாடளாவிய ரீதியில் பல இடங்களிலும் சோதனைச் சாவடிகளை அமைத்து, வாகனங்களைச் சோதிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் போக்குவரத்து நிர்வாகம் மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக ஹப்புகொட தெரிவித்தார்.*

*பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -*

*விசேட அதிரடிப்படையினர், மோப்ப நாய் பிரிவு, அதிவேக வீதி போக்குவரத்து பிரிவு, கொழும்பு போக்குவரத்து தலைமையகம் உள்ளிட்டவை இந்த நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அரச, தனியார் பஸ்கள் உட்பட சகல வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்படவுள்ளன.*

*குறிப்பாகக் கொழும்பிலிருந்து ஏனைய மாகாணங்களுக்கு கொண்டு செல்லப்படும் போதைப்பொருள்களைக் கைப்பற்றுவதே இதன் மூலம் எதிர் பார்க்கப்படுகிறது.*

*சோதனைக்குட்படுத்தப்படும் வாகனங்களுக்கு விசேட ஸ்டிக்கர்கள் ஒட்டப்படும். ஏனைய சோதனைச் சாவடிகளிலுள்ள பொலிஸார் இலகுவில் இனங் காண்பதற்காக இந்த ஸ்டிக்கர்கள் ஒட்டப்படவுள்ளன.*

*எவ்வாறிருப்பினும் கொழும்பில் சோதனைக்குட்படுத்தப்பட்ட ஆனால் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் காணப்பட்டால் அவற்றை மீண்டும் சோதனைக்குட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.*

*ஒட்டப்படும் ஸ்டிக்கர்களில் பொலிஸ் பிரிவுகள் மற்றும் தினம் என்பன குறிப்பிடப்படும். எனவே, வேறொரு பொலிஸ் பிரிவுக்குள் ஏற்கனவே சோதனைக்குட்படுத்தப்பட்ட வாகனம் பயணித்தால், அவை மீண்டும் சோதனைக்குட்படுத்தப் படும். - என்றார்.*

*(05)*

## மதுபான சுற்றிவளைப்புக்குச் சென்ற பொலிஸாரை கண்டு தப்பியோடியவர் பள்ளத்தில் வீழ்ந்து இறப்பு

*குருணாகல் வில்பாவ பகுதியில் சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்யும் இடம் ஒன்றைச் சுற்றிவளைப்பதற்காக குருணாகல் பிரிவு குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் சென்றபோது, பொலிஸாரைக்கண்டு அங்கிருந்தவர்கள் தப்பியோடியபோது பள்ளம் ஒன்றில் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்; என குருணாகல் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.*

*உயிரிழந்த நபர் குருணாகல் வெஹெர பிரதேசத்தைச் சேர்ந்தவர்.*

*இந்நிலையில், அங்கு காணப்பட்ட சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையமொன்றை சுற்றிவளைத்து 22,500 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானத்தை கைப்பற்றியதுடன் அம்பககஸ்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேகநபருடன் இருந்த மேலும் இருவர் அந்த இடத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.01.2024இல் வெளியிடப்பெற்றது.